
உ

திருச்சிற்றம்பலம்.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.



# நான் யார்?

## (SELF-REALIZATION)

மு. ஆறுமுகம்.

Read. 2.4.63

உ

திருச்சிற்றம்பலம்.

# நான் யார்?

# (SELF-REALIZATION)



இது

முப்பொருளுண்மை, சுத்தாத்துவிதம்

இயற்றியவராகிய


மு. ஆறுமுகம்.

செய்தது.

சிறம்பான்.

உ

திருச்சிற்றம்பலம்.



இச்சுவடி

திருக்கேதீச்சரக் கேதீசுவரர்,

கௌரியம்மை,

அவர்களின் திருவடி மலர்களுக்குச்

சாத்தப்பட்டது

# FORWARD.

I must say at the outset that I am not competent to write a "Forward" to this pamphlet on "WHO AM I" a subject which has baffled great men throughout ages.

Mr. M. Arumugam who has studied the Saiva Sithantha philosophy under a proper master, and has been in search of truth, is well qualified to produce this booklet in which he explains the subject lucidly and logically.

I heartly commend it to all interested in spiritual values of life.

A. NEELAPILLAI.

Seremban,

25.3.1957.

# முன்னுரை.

பஞ்சபூத சத்திகளே உலகில் கண்டாம். நீரில் உள்ள சத்தி உலகையே அழித்துவிடும். நெருப்பின் சத்தி யாவற்றையும் சாம்பலாக்கிவிடும். காற்று யாவற்றையும் திரட்டித் தூக்கி வீசிவிடும்.

உயிர் அற்ற, அறிவற்ற பூதம் தன் சத்தியை பிறர் அறியக் காட்டுகின்றது, அறிவுடைய மனிதன் தன் சத்தியை இழந்து விட்டான். அவன் சத்தி யாது? அதுதான் ஆன்ம சத்தி அல்லது ஆன்ம ஞானம்.

தன்னுண்மை அறிந்தவனுக்கே ஆன்ம சத்தி பிறக்கும். இந்நூலின் நோக்கம் ஆன்ம ஞானத்தைத் தட்டி எழுப்புவதேயாம். இந்நூலில் ஆன்ம ஞானத்தை வளர்த்தற்கு எட்டு மேற்கோள்கள் கூறப்பட்டு இருக்கின்றன. அவற்றைக் காலை மாலையில், கிரமமாய்ப் படித்து சிந்தித்து வர, ஆன்ம சத்தி உற்பத்தியாகி வளர்ந்து வரும்.

சுபம்.

மு. ஆறுமுகம்.

சிறம்பான்,

24.3.1957.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

சிவமயம்.

## கணபதி வணக்கம்.

நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானம்,
கற்குஞ்சரக் கன்று காண்.

## சிவ வணக்கம்.

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி,
மாவின்கனி தூங்குபொழின்மா தோட்ட
நன்னகரிற்,
பாவம் வினையறுப்பார் பயில்பாலாவியின்
கரைமேற்,
றேவனெனையாள்வான் றிருக்கே
தீச்சரத்தானே.

## குரு வணக்கம்.

பொய்கண்டார் காணாப் புனிதமெனுமத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநாளெந்நாளோ.

இவ்வெளியீடு இலவசமாய்க் கொடுக்கப்படும்.



உ
சிவமயம்.

# நான் யார்?

எனது உடம்பில், "நான்" என்பது யாது?

இக்கேள்வி, உலகம் உற்பத்தியான காலம் தொட்டு இன்று வரையும் கேட்கப்பட்டு வருகின்றது. இனிமேலும் கேட்கப்பட்டு வரும் என்பது மிகையாகாது.

இவ்விடத்து, தாயுமான சுவாமிகளின் பராபரக் கண்ணி கவனிக்கத்தக்கது:

(1) தன்னையறிந்தருளே தாரகமா நிற்பதுவே, யுன்னையறிதற்கு பாயம் பராபரமே."

(2) "தன்னையறிந்தாற்றலைவன் மேற்பற்றலது, பின்னையொரு பற்றுமுண்டோ
பேசாய் பராபரமே".

தன்னை அறிந்தும், தன்னை அறிவித்த கடவுளை அறிந்தும் நிற்றலே வாழ்வின் நோக்கம், என்பது.

## (1) பிறர் பக்கம்.

மேலைத் தேச வாசிகள், வியாபாரத் துறைகளுள், மிக ஆழமாக நுழைந்திருக்கின்றனர். ஆனால், ஆன்ம ஞானத்தில் அவர்கள் ஆழ்வாகச்

செல்லவில்லை. இக்குறையாற்றான், அவர்கள் கடவுளுண்மையை மறுக்கின்றனர்.

இரசாயன வாதிகள், பௌதீக வாதிகள், உடம்பின் கண் நிகழும் அறிவு தீபனப் பிரதிகள் என்பர். உதாரணமாக, ஒருவன் சர்க்கரையை நாவில் வைக்கின்றான். உடனே புல நாடிகள் நாவிலிருந்து மூளைக்குச் செல்லுகின்றன. பின், மூளையிலிருந்து அசைநாடிகள் நாக்கில் உள்ள கோளங்களைத் தொழிற்படுத்துகின்றன. இது போலவே உடம்பில் நிகழும் எல்லா இயக்கங்களும் நரம்புகளின் பழக்கமேயாம் என்பர்.

மேலைத்தேச விஞ்ஞானிகளிற் பலர், சூரியன் அழிந்த பின், மனித வாழ்வு முடிவடைந்து விடும் என்பர். ஏனைய பிராணிகளும் அழிவெய்தும் என்பர். வாழ்வின் முடிவு இவ்வளவுதான் எனின், மக்களுக்கு எங்ஙனம் உயர் வாழ்வு வாழ மன எழுச்சி அதாவது உற்சாகம் ஏற்படும்? வாழ்விற்கு நோக்கமில்லையா? இவர்கள் சொல்வது உண்மையானால், ஒருநாள் தானும் ஏன் வாழ வேண்டும்?

## (2) சைவ சித்தாந்தத் துணிபு.

(அ) சற்காரியவாதம்—சைவ சித்தாந்தம் சற்காரியவாதம். அதாவது இல்பொருளிலிருந்து உள்பொருள் தோன்றாது. உள் பொருளிலிருந்து உள்பொருள் தோற்றும். உள் பொருளிலிருந்து இல்பொருள் தோன்றாது என்பதே.

இவ்வுண்மை யாவராலும் ஒத்துக் கொள்ளப் பட்டதே.

இரசாயன, பௌதீக வாதிகள், விஞ்ஞானிகள் யாவருக்கும் சற்காரியவாதம் உடன்பாடேயாம்.

(ஆ) மாயை (Energy): மாயை உண்மை யாவராலும் ஒத்துக்கொள்ளப் பட்டதே. இது உலக மக்களுக்கே ஒரு பொது உண்மை. மாயையிலிருந்து 96 தத்துவங்களைக் கடவுள் தோற்றுவித்தார். இவைகளின் கூட்டமே உடம்புகள். (கடைசி ஒற்றையில் தத்துவங்கள் காட்டப்பட்டு இருக்கின்றன)

நாங்கள் வாழும் சட உலகில் சடப்பொருள் இருவகைத்து:

(1) தனிப்பொருள். (2) கூட்டுப்பொருள். தனிப்பொருள் சூக்கும, அதி சூக்கும அணுக்கள். கூட்டுப்பொருள், உலகமும், உலகின் கண் உள்ள உடம்புகளும். உலகமும், உடம்புகளும், அணுக்களாக மாறி மாயையில் ஒடுங்கும். மாயை அநாதி. அழியாது.

(இ) சித்துப் பொருள்: கடவுளும் உயிர்களும். அநாதியானவை. அழியாதவை.

(ஈ) பாசம்: பாசம் ஐவகைத்து. (1) ஆணவமலம். இது உயிரைப் பற்றியுள்ள அழுக்கு. (2) கன்மம். இது நன்மைக்கு

நன்மை, தீமைக்கு தீமை என்னும் இயற்கைச் சட்டம் அல்லது காரண காரியச் சட்டம். (3) மாயை: சுத்தமாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மூன்றும். இவை அழியாவாம், இவை காரண ரூபமாய் உள்ளவை. (4) திரோதாயி: சிவபெருமானின் ஆதி சத்தி. ஐந்தொழில் செய்யும் சத்தி. (5) மாயேயம். (மாயா காரியங்கள்) இவை அணுவாக மாறி மறையும் தன்மையன. ஆனால் அழியும் தன்மையன அல்ல.

சைவ சித்தாந்தம் ஒரு பொருளும் அழியாது எனக் கூறுகின்றது. அழிதல் என்பதின் தாற்பரியம், காரியம் காரணத்தில் ஒடுங்குதல் என்பதேயாம். ஆதலால் ஒருவரும் பயப்படத் தேவையில்லை. சூரியன் அழிந்த காலத்திலும் கடவுளும். உயிர்களும், அணுக்களும் அழியாவாம். என்னை? அவை ஒவ்வொன்றும் தனிப் பொருட்களே. அநாதியாய் உள்ளவைகளே. ஆதலால், அவை அழியா என்க. கூட்டுப் பொருட்கள் (உடம்புகள்) பிரிந்து அணுக்களாய் மாறி, மாயையில் ஒடுங்கும். பின் கடவுள் புதுச் சிருட்டி செய்வார். பஞ்ச கிருத்தியம் அநாதியாதலால், அதற்கு முடிவில்லை.

## (3) உயிர் உண்மை.

சிவஞானபோதம் மூன்றும் சூத்திரம் பசு உண்மை பின் வருமாறு சாதிக்கின்றது:—

“உளதிலதென்றலி னெனதுடலென்றலி
ஐம்புல னொடுக்கமறிதலிற் கண்படி
லுண்டி வினையின்மையினுணர்த்த வுணர்தலின்
மாயாவி யந்திர தனுவினு ளான்மா.”

எட்டு மேற்கோள்கள் கொண்டது இச் சூத்திரம். அவற்றை ஆராய்வாம்.

முதலாவது மேற்கோள் :—

“ஈண்டு இலதென்றலின்
ஆன்மாவுள தென்றது”

**கருத்து:**—வைத்தியர்கள் உடம்பைக் கூறு படுத்திப் பார்த்த பொழுது அதற்குள் “நான்” என்று ஒரு பொருளைக் காணவில்லையாம்.

ஒருவன் தன் தேகத்திலுள்ள எல்லாக் கருவிகளையும் வெவ்வேறாய் ஆராய்ந்து பார்க்கின்றான். கடைசியாய்த் தன் உடம்பில் ஆராய்வதற்கு ஒரு கருவியும் இன்மை கண்டு, “நான்” என்று உடம்பில் ஒன்றும் இல்லை என்னும் முடிவுக்கு வருகின்றான்.

“நான் இல்லை”, என்று சொல்லும் பொருள் தான் யாது என்றுமறித்து ஆராய்யப்புகின், அப்பொருளே “நான்” ஆகிய ஆன்மாவாம் எனக்கண்டு மகிழா நிற்பனன்றே?

ஆன்மா உய்யும் பொருட்டு உடம்பு கொடுக்கப்பட்டது. ஆனால் அதற்குள், அது ஆழமாய்த் தாண்டு விட்டது. சிவபெருமானின் பெருங்கருணை அவ்வுயிரை மீட்குமன்றோ? "தாயேயாகி வளர்த்தனை போற்றி" என்பது திருவாசகம்.

இரண்டாவது:—

"இனி எனதுடலென்றலின்
ஆன்மா வுளதென்றது"

**கருத்து:**—எனது வீடு, எனது புத்தகம், என்னின் வேறு ஆனது போல, எனது உடம்பும், என்னின் வேறேயாம். ஆகையால், உடம்பின் வேறாய் உயிருண்டு. உடம்பின் வேறாய் உயிர் தன்னை அறிய முடியாமல் இருக்கின்றது. அது உடம்பில் வைத்திருக்கும் பற்று இவ்வளவு அவ்வளவு அல்ல. எல்லை கடந்த பற்று. பாவம்!! உடம்பே தான் என நிற்கின்றது. அறியாமையின் தடிப்பு அவ்வளவு. அறியாமை மலத்தால் ஏற்பட்டது.

மூன்றாவது:—

"இனி ஐம்புலனறிதலின்
ஆன்மா உளதென்றது"

**கருத்து:**—"நான்" காதால் சத்தத்தையும், உடம்பால் பரிசத்தையும், கண்ணால்

உருவத்தையும், நாக்கால் இரசத்தையும், மூக்கால் கந்தத்தையும் அறிந்து அனுபவிக்கின்றேன். ஆனபடியால், "நான்", ஐம்பொறிகளுக்கும் அவற்றால் பெறும் ஐம்பலன்களுக்கும் வேறு என்பதாம். உடம்பில் ஒரு பொருள் ஐம்புலன்களையும் அனுபவிக்கின்றது. அப்பொருள் யாது? அதுவே ஆன்மாவாம். அதுதான் "நான்" என்னும் அனுபவத்திற்கு உரிய பொருள். இவ்வுண்மை கடைப்பிடிக்க.

நான்காவது:—

**"இனி ஒடுக்க மறிதலின்**
**ஆன்மா உளதென்றது"**

**கருத்து:**—நித்திரைக்குப் போக முன் உள்ள நிலை விழி நிலை என்பர். இந்நிலையில், உயிர் புருவ நடுவில் இருக்கின்றது. இங்கே உயிர் முப்பத்தைந்து கருவிகளோடு பொருந்தி நிற்கின்றது. இதன் பின், உயிர் சொப்பனத்தானத்துக்கு இறங்குகின்றது. இத்தானம் கண்டம். இந்நிலையில், கனவு காண்கின்றது. தூல தேகம் தொழிற்படாமல் கிடத்தலினாலும், கனவு காண்கின்ற அனுபவம் இருத்தலினாலும், உயிர் வேறு ஒரு தேகத்தோடு பொருந்தி நிற்றல் புலனாகின்றது. அத்தேகம் சூக்கும உடம்பு எனப்படும். தூல உடம்பு செத்தவுடன்

உயிர் சூக்கும உடம்போடு வெளிச் செல்கின்றது.

உயிர் சொப்பன நிலையில் கண்ட கனவை விழி நிலையில் மயங்கிக் கூறுதலால், அது சூக்கும தேகத்தின் வேறேயாம்.

சூக்கும தேகமே உயிர் என்றால் என்னை? என்பர் சூக்கும தேக வாதிகள். அவர் கூற்று ஒத்துக் கொள்ளத்தக்கது அன்று. என்னை? கூறுதும். சூக்கும தேகம் விழி நிலையிலும், சொப்பன நிலையிலும் ஒரே தன்மையாயிருக்கின்றது. ஆகையால், அது சொப்பனத் தானத்தில் கண்ட கனவை விழி நிலையில் மயங்கிக் கூற வேண்டியதில்லை.

உயிர் கருவிகளை விடுதலும் கூடுதலும் செய்வதினால், அது மயங்கிக் கூறுதல் இயல்பேயாம். ஆகவே, சூக்கும தேகத்தின் வேறாய் உயிர் உண்டு என்பது.

ஐந்தாவது :—

"இனிக் கண்படில் உண்டி
வினை இன்மையின் ஆன்மா உளதென்றது"

**கருத்து :**— சாக்கிரம் (விழி நிலை) சொற்பனம் (கனவு நிலை) சுழுத்தி (ஆழ்ந்த நித்திரை நிலை) களில், பிராணவாயு ஒரே தன்மை

யாய் இயங்குவதால், பிராணவாயுவே உயிர் என்பர் பிராணான்ம வாதிகள். பிராணவாயு உயிர் என்னில், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூன்று இடங்களிலும் நிகட்சிகள் ஒரே தன்மையாய் நிகழ வேண்டும். அப்படி நிகழாமையால், பிராணவாய்யு உயிர் அன்று.

சுழுத்தியில், ஆழ்ந்த நித்திரை கொண்ட உயிர் விழி நிலையில், தான் சுகமாக நித்திரை செய்தேன் என்று மாத்திரம் அனுபவம் கூறுகின்றது. சொற்பன நிலையிற்போல், தன் அநுபவத்தை விபரமாகக் கூற முடியாமைக்குக் காரணம், சுழுத்தியில் உயிர், பிராண வாயு, சித்தம் என்னும் இரண்டு கருவிகளோடு மாத்திரம் கூடி நிற்கின்றபடியால் என்க. துழுத்தி நிலையில் உள்ள தேகம் காரண தேகம்.

சொற்பனத்தானத்தில், உயிர் கருவிகளை விட்டுச் சித்தத்தோடும், பிராணவாய்வோடும் சுழுத்தித் தானத்துக்கு இறங்குகின்றது. சுழுத்தியில் இன்ப துன்பவிடையங்களும், உடம்பு தொழிற்படுதலும் இல்லை. சுழுத்தித் தானம் இருதயம். கண்படில் என்பது துயில் இடத்து. உண்டி என்பது விடயங்கள் இடமாக வரும் இன்ப துன்ப நுகர்ச்சி. வினை என்பது உடம்பு தொழிற் படல்.

ஆறுவது:—

## "இனி உணர்த்த வுணர்தலின் ஆன்மா வுளது என்றது"

**கருத்து:**—பிரமமே உயிர் என்னும் மதங்கள் உள. இது அனுபவத்திற்கு மாறான கொள்கை என்பது காட்டுதும்.

கடவுளுடைய தன்மைகளையும் உயிரினுடைய தன்மைகளையும் அறிந்தால், இந்தக் கேள்விக்கு நல்ல விடை கொடுக்கலாமன்றோ?

முதல்வனின் சிறப்புத் தன்மைகள்:

(1) தன்வயத்தனாதல் (எக்காலத்தும் ஒருதன்மையாயிருத்தல்), (2) தூய உடம்பினனாதல் (சித்துப்பொருள்), (3) இயற்கை உணர்வினனாதல், (4) முற்றுணர்வினனாதல், (5) இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், (6) பேரருளுடைமை, (7) முடிவிலாற்றலுடைமை, (8) வரம்பிலின்பமுடைமை.

இந்த எட்டுக் குணங்களும் கடவுளுக்குரிய சிறப்பியல்புக் குணங்களாம்.

உயிரின் குணங்கள் இறைவனின் இந்த எட்டுக் குணங்களின் மறுதலைகளேயாம். ஆதலால், பிரமம் உயிராகாது

என்பது உள்ளங்கையில் நெல்லிக்கனியோ அன்றோ? கூறுமின்கள்!

உயிர் அறிவித்தால் அன்றி ஒன்றையும் அறியாது என்பது எங்கள் அநுபவமா அல்லவா? அத்தன்மைய உயிர் கடவுள் அன்று என்று சொல்லவும் வேண்டும் கொல்?

ஏழாவது :—

"இனிமாயா வியந்திர தனுவினுள்
ஆன்மாவுள தென்றது"

**கருத்து** :—உடம்பே ஆன்மா வென்பர் ஒரு சாரார். உடம்பு 96 தத்துவங்களின் கூட்டமேயாம் (compound). கூட்டம் பிரியும், பின் மறையும், உயிர் தனிப் பொருள். அநாதியாய் உள்ளது. ஒரு காலும் அழியாது. ஆதலால், உடம்பு உயிர் அன்று. உடம்பு ஒரு இயந்திரம். இது உயிரால் செலுத்தப்படுகின்றது. "நாங்களே கடவுள் என்றிடும் பாதகத் தவரும்" என்பது இவ்விடத்துச் சிந்திக்கத்தக்கது. இது தாயுமானவர் அருள் வாக்கு.

எட்டாவது:—

மனம் உயிர் அன்று என்பது
(மனம் சூக்கும தேகத்திலுள்ளது)

**கருத்து:**—உயிருக்கும், மனதிற்கும் உள்ள நெருங்கிய சம்பந்தம் எது போல எனின் அரசனுக்கும் மந்திரிக்கும் உள்ள சம்பந்தம் போல என்க.

அரசன் மந்திரியின் சொல்லைக் கேட்டு நடத்தல் இயல்பு. ஆனல் அரசன் மந்திரியில் ஐயுறவு கொண்டானே, உடனே மந்திரியை எதிர்த்து நிற்பான். சில சமயங்களில், மந்திரி சூட்சியால் அரசனைக் கொன்று அவன் பதவியைக் கைப்பற்றியதும் உண்டு.

இவ்விடத்து மனம் மந்திரி. உயிர் அரசன். "அமைச்சர சேய்ப்ப நின்று" என்பது சிவஞானபோதம்.

கீழ் வாழ்க்கையில், உயிர்மனத்தின் பின் செல்லும். மனம் ஆதிக்கம் செலுத்தும். இராசாவாகிய உயிரை மதியாது. இவ்விடத்து "கள்ள மனம் துள்ளுவதென் கண்டாய் பராபரமே" என்பது கவனிக்கத்தக்கது.

மனத்திற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு மிகச் சிக்கலானது. "சிந்தையைச் சீவனென்றுஞ் சீவனைச் சிந்தை என்றும்" என்பது சிவஞானசித்தியார். சிந்தை=மனம். சீவன்= உயிர்.

இச்சிக்கலான நிலையை, "கருவியா மன மும்" என்னும் திருவாக்கால் தெளிவிக்கின்றார் அருணந்தி சிவாசாரியார். "கருவி", என்னும் அடமொழியை மனத்துக்குக் கொடுக்கின்றார். கருவி என்பது மாயா காரிய உறுப்பு. மெய், வாய், கண், மூக்கு முதலியவைகளும் கருவிகளே யாம். அப்படியே மனமும் என்பதாம். ஆனால், மனம் மிக நுண்ணிய கருவியாகும். அது உயி ரின் அறிவை விளக்கும் பொருட்டு உயிருக்கு இறைவனால் கொடுக்கப்பட்டது. அது உயி ரோடு கலந்து உயிராய் நிற்கின்றது நிட்டை என்னும் பெருநிலையும் மனத்துக்குப் பயப்படு கின்றது. சில வேளைகளில் "நிட்டை" அதா வது அறிதுயில் மனத்தின் கொடுமையால் கலைக் கப்படுகின்றது. கொடிது, கொடிது, மனப் பழக்கம் கொடிது.

துறவிகள் தங்களை "மன்னவன் றன்மகன்" என்று மனதுக்குச் சொல்வது வழக்கம். அப் படிச் சொன்ன உடனே மனம் களைத்துவிடும். விதானையின் பிள்ளைகளுக்கு ஏனைய பிள்ளை கள் கொஞ்சம் பயப்படுதல் இயல்பு. நாங்கள் கடவுளின் இனத்தவர்கள் என்பதை மனத் துக்கு அறிவித்து விட்டால், மனம் எங்களுக்கு அடிமையாகும். சிவபெருமானின் சடை முடி யில் உள்ள நல்ல பாம்பு, கருடனைக்கண்டு பயப் படுவதில்லையாம்.

மனத்தை நேரே எதிர்த்துப் போராட முடி யாது. ஒருவன் தன் நிழலை, மண்ணால் மறைக்க

மறைக்க, மறைக்கப் போட்ட மண்ணின் மேல் அந்நிழல் ஏறி ஏறி நிற்றலைக் காண்பான். மனத்தை அடக்க, அடக்க, மனம் அடக்கிற வனை அடக்கிவிடும். "கொள்ளித்தேள் கொட் டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க், கள்ளமனந் துள்ளுவதென் கண்டாய் பராபரமே" என்ப தைக் காண்க.

மனத்தோடு சென்று மனத்தை வெல்லல் வேண்டும். மனத்தை ஒரு சிறு குழந்தையா கப் பாவித்தல் நல்லது. அது ஒருவனைப் பார்க் குக்குப் (Park) போகும்படி தூண்டும் பொழுது அவன் மனத்தைக் குழந்தாய்!!! என்று அழைத்து, நான் இன்று உன்னைப் படைத்த கடவுளை, அதாவது உன் அருமைத் தகப்ப னை, வழிபடக் கோவிலுக்குப் போகப் போகின்றேன். நாளைக்கு உன்னைப் பார்க்குக் குக் கூட்டிச் செல்லுகிறேன், என்று சொல்லு தல் மனத்தை வெல்லுதல் ஆகும்.

தாயுமான சுவாமிகள் மனத்தைப் பின்வரு மாறு வாழ்த்துகின்றார்:—

"எவ்விடத்தும் பூரணமா மெந்தை
பிரான் றண்ணருளே,
யவ்விடத்தே யுன்னை நெஞ்சே யாராயிற்
கண்டிலனே,
யவ்விடத்து மாயையிலே மாண்டனையோ
வவ்விடமுஞ்,
செவ்விடமே நீயுஞ் செனனமற்று வாழியவே"

உடம்பின் கண் சீவித்தற்கு அடிப்படையாய் உள்ளது எதுவோ அதுவே உயிராம்.

இதுகாறும் கூறியவற்ருல், இந்த உடம்பினுள்ள தத்துவக் குவியற்குள், இதுவே உயிர் அதுவல்ல என ஆராய்ந்து காட்டப்பட்டது. இப்படி ஆராய்வதால், தன்னுண்மையாகிய ஆன்மஞானம் விருத்தியடையும். பின் உயிர், இன்ப உருவினனுன சிவத்தின் மேல் நாட்டமுற்று சிவப்பேறு பெறும். இவ்வுண்மையை பின் வரும் அருள் வெண்பா விளக்குகின்றது.

"பன்னிறங்காட்டும் படிகம்போ லிந்திரியந்,
தன்னிறமே காட்டுந்தகை நினைந்து—
பன்னிறத்துப்,
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய் பொய்யா
மெய்கண்டான்,
மெய்ப் பொருட்குத்தைவமாம் வேறு."
—சிவஞானபோதம்.

எது பந்திக்கப்பட்ட இச்சா ஞானக்கிரியைகளை உடையதோ, அதுவே உயிராம். அது சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் தன்மையது. ஆனல் அது தனிப்பொருளே என்பர்.

பளிங்கிருக்கின்றது. அதற்கு இரு தன்மைகள் உள. ஒன்று அதன் இயற்கைத் தன்மை. மற்றையது அதன் செயற்கைத் தன்மை. இவ்விரு தன்மைகளையும் நாங்கள் எப்படியறியலாம்?

பளிங்கு தனித்திருக்கும் தன்மையே அதற்குச் சிறப்புத்தன்மை. அது பச்சை, மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை முதலிய நிறங்களோடு கலந்து அல்லது சேர்ந்து இருக்கும் தன்மையே அதற்குப் பொதுத்தன்மை.

பளிங்கின் இயற்கைத் தன்மை பரிசுத்தமான ஒளி உருபமே. அதன் செயற்கைத் தன்மை, அது சேர்ந்த பொருளின் தன்மையே. ஆகவே, பளிங்கு தானயும் பிறபொருளாயும் இருக்கும் தன்மையது என்பது கண்டாம்.

உயிரும் பளிங்கு போன்றது. உயிரின் தூய தன்மை பளிங்கின் தூய ஒளித்தன்மையே.

உயிரின் செயற்கைத் தன்மை பளிங்கின் செயற்கைத் தன்மை போன்றது. நிறங்கள் பளிங்கின் தன்மையை மாற்றுதல் போல, விடயங்க்ள் உயிரின் தன்மையை மாற்றுகின்றன.

துன்பமான விடயம் உயிரைத் துன்பத்தில் ஆழ்த்தி விடும். இன்பமான விடயம் உயிரை இன்பத்தில் ஆழ்த்தி விடும். சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்னும் விடயங்களை உயிர் ஒவ்வொன்று ஒவ்வொன்ருய் அநுபவிக்கின்றது. அதுவும் அன்றி, அந்தந்த விடயமே ஆகிவிடுகின்றது. உயிரும் தானயும் பிறபொருளாயும் இருக்கும் தன்மையது. உயிரின் பொது இயல்பு, அது சார்ந்த பொருளின் இயல்பு என்பது எங்கள் அநுபவமே.

நித்திரைக்குச் சென்ற பின் படும் ஐந்து அவத்தைகளும் (நிலைகள்) விழி நிலையில்படும் ஐந்து அவத்தைகளும், ஆரம்ப நிட்டையில்படும் ஐந்து சுத்தாவத்தைகளும் உயிரின் பொது இயல்பாகும். கடவுளோடு அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலையே உயிருக்குச் சிறப்பு நிலையாம்.

பளிங்கின் பொது இயல்பு, சிறப்பு இயல்புகளை ஆராய்ந்து காண்கின்றமை போல, உயிரின் பொது இயல்பு, சிறப்பு இயல்புகளை ஆராய்ந்து ஆராய்ந்து வர, ஆன்ம ஞானம் கைகூடும். ஆன்மா,*முழுஆன்மாவாகி, தன்னில் உறைந்து நிற்றல் ஆன்ம தரிசனமாகும்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின்"

மெய்கண்ட தேவநாயனர் திருவடி வாழ்க.

எனது குரு அருளானந்தசிவம் வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.


---

* "முழு ஆன்மா" என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி, மனச்சாட்சி என்று ஆருய்ப் பிரியாமல், தன்னில் உறைந்து ஒன்ருய் நிற்றல் என்பதாம்.

# அநுபந்தம் (Appendix)

## 36 காரண தத்துவங்கள்.

- மாயை
  - சுத்தமாயை
    - நாதம் (1)
    - விந்து (2)
    - சாதாக்கியம் (3)
    - ஈசுரம் (4)
    - சுத்தவித்தை (5)
  - அசுத்தமாயை
    - காலம் (6)
    - நியதி (7)
      - புருடன் (11)
    - கலை (8)
      - வித்தை (9)
        - அராகம் (10)
      - பிரகிருதி (12)
        - குணம் (13)
        - புத்தி (14)




(1) நாதம் முதலிய ஐந்தும் சிவ தத்துவம்.
(2) காலம் முதல் பிரகிருதி ஈறுக ஏழும் வித்தியா தத்துவம்.
(3) குணம் முதல் பிருதிவி ஈறுக இருபத்தி நாலும் ஆத்தும தத்துவம்.

## 60 காரிய தத்துவங்கள்.

அவை பின் வருமாறு காண்க:—

(1) பஞ்சபூத காரியங்கள் 25. அவை:—(1) மூளை, (2) கொழுப்பு, (3) விந்து, (4) இரத்தம், (5) நீர், (6) ஊண், (7) உறக்கம், (8) பயம், (9) புணர்ச்சி, (10) சோம்பல், (11) காமம், (12) குரோதம், (13) லோபம், (14) மதம், (15) மச்சரம், (16) இருத்தல், (17) கிடத்தல், (18) நிற்றல், (19) நடத்தல், (20) ஓடுதல், (21) நரம்பு, (22) எலும்பு, (23) தசை, (24) தொப்புள், (25) மயிர்.

(2) இடை பிங்கலை முதலிய நாடிகள் பத்து.

(3) பிராணன் அபானன் முதலிய வாயுக்கள் பத்து.

(4) பிள்ளைப்பற்று, நிலப்பற்று, பணப்பற்று என்னும் முப்பற்றுக்கள்.

(5) சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி வாக்குக்கள் நான்கு.

(6) சொல்லல், செல்லல், தானம், கழித்தல், ஆனந்தித்தல் என்பன ஐந்து.

(7) சாத்துவிதம், இராசதம், தாமதம் என்னும் குணங்கள் மூன்று.

(1)—(7) மொத்தம்—60.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி :: சுன்னாகம்,
இலங்கை.

பாரதி பதிப்பகம்
இறம்பான்.